மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது ஒரு விவாதப் பிரச்னை. தரம் எதிலே குறைந்திருக்கிறது, எந்த வகையில் குறைந்திருக்கிறது என்பதில் வலலுனர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. ஆனால், கடிதப் போக்குவரத்து மூலம் வேறு பல பல்கலைக்கழகங்கள் பட்டங்கள் தருகின்றன. அந்தப் பட்டங்களை ஒழுங்காக நடைபெறுகின்ற கல்லூரியில் படித்துப் பெறப் படுகின்ற பட்டங்களுக்கு ஈடுஇணையாகத்தான் நாம் கருதி வருகிறோம். வட மாநிலங்களில் பல்கலைக்கழகங்கள் கடிதப் போக்குவரத்து மூலம் நடத்து கின்ற படிப்பில் சேர்ந்து தொடர்பு கொண்டு அதிலே பரிட்சை எழுதி, பட்டம் பெற்று, அந்தப் பட்டங்கள் மற்ற பட்டங்களுக்கு இணையாகக் கருதப்படு கின்றன. பல பேர் அங்கே போய் பரிட்சை எழுதுகிறார்கள். ஆகவே, தமிழகத்திலும் இப்படிப்பட்ட முறை இருக்கலாம் என்று வகுக்கப்பட்டு, இப்பொழுது நடந்துவருகிறது. அந்த ஒரு முறை மட்டும் இருந்தால், உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் நிலைமை ஏற்படலாம். ஆனால் இங்கே ஒழுங்காக நடைபெறுகிற கல்லூரிகளில் பட்டப்படிப்பு, மாலைநேரக் கல்லூரி களில் பட்டப்படிப்பு, கடிதப் போக்குவரத்து மூலம் பட்டப்படிப்பு ஆகிய மூன்று முறைகளும் இருந்து வருகின்றன.

திரு. ரா. ரா. முனுசாமி : துணைத் தலைவரவர்களே, மாலைநேரக் கல்லூரி களில் சேருவதற்கு வயது வரம்பு உண்டா ? 40, 50 வயது ஆனவர்களும் மாலை நேரக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வயதுவரம்பு எதுவும் இல்லை என்றுதான் கருதுகிறேன். தனிக் கேள்வி போட்டால் தகவல் திரட்டிக் கொடுக்கப்படும்.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தமிழ் புலவர், வித்வான் போன்ற வகுப்புக்களுக்கு மாலைநேரக் கல்லூரிகளில் இடம் அளிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது அப்படிப்பட்ட வகுப்புகள் இல்லை.

திறந்தவெளி திரைப்பட அரங்குகள்

*206 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் திறந்த வெளி சினிமா அரங்கு உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1973 மார்ச் 2]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம். தமிழ்நாட்டில் திறந்தவெளி திரைப்பட அரங்குகள் இரண்டு உள்ளன.

(இ) ஒன்று ஆவடியிலுள்ள மத்திய ஏமக்காவல் படை முகாமில் உள்ளது. மற்றொன்று செங்கற்பட்டு மாவட்டம் கல்பாக்கத்திலுள்ள சென்னை அணுசக்தித் திட்ட நிலையத்தில் உள்ளது. இந்த திறந்த வெளித் திரைப்பட அரங்குகள், வணிக நோக்கின்றி, அந்தந்த வளவில் உள்ள பணியாளர்களின் பொழுதுபோக்கிற்காக மட்டுமே செயல்பட்டு வருகின்றன.

திரு. எஸ். கணேசன்: திறந்தவெளி திரைப்பட அரங்கத்தை தனியார் நடத்த அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதா? மகாபலிபுரம் போன்ற சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் கோடைக்காலங்களிலே திறந்தவெளி திரைப்பட அரங்கை நடத்துவதற்கு தனியார்களுக்கு ஊக்கமளிக்கப்படுமா? அல்லது அரசாங்கமே நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திறந்தவெளித் திரைப்பட அரங்கை ஏற்படுத்தத் தனியார் யாருக்கும் அனுமதி அளிக்கப்படவில்லை. ஏனென்றால் அதற்கு ஏற்ற இடவசதி முக்கியம். அதைத்தவிரச் சட்டம், அமைதி, ஒழுங்கு காப்பாற்றப்படுவது முக்கியம். ஆகவே, மாமல்லபுரத்திலும் அதைப்போன்ற வேறு இடங்களிலும் அனுமதிக்க இயலாது.

திரு. கே. கந்தசாமி: திறந்தவெளி திரைப்பட அரங்கு ஒன்றையாவது மதுரை போன்ற பெரிய நகரங்களில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திறந்தவெளித் திரைப்பட அரங்கினை மாமல்லபுரத்தில் எப்படி அமைக்க முடியாதோ அதைப்போலவே மதுரை போன்ற பெரிய நகரங்களிலும் அமைக்க முடியாது.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: திறந்தவெளி திரைப்பட அரங்குகள் சிறைச்சாலைகளிலே அமைக்கப்பட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சிறைச்சாலைகளில் திரைப்படக் காட்சிகளைத் திறந்தவெளி அரங்கனில்தான் கைதிகளுக்கு காட்டுகிறார்கள்.